பட்டுருந்த முன்பக்க இரண்டு சக்கரங்களுக்கும் ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் பொருத்தப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அத்தகைய முறையை மாற்றி ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்களை இனிமேல் அத்தகைய பேருந்துகளுக்குப் பொருத்தாமல் இருக்க, இத்தகைய விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு, அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ரீட்ரெட் செய்யப்பட்ட டயர்கள் முன் சக்கரத்தில் முதன்முறையாக முன்பக்கத்தில் போடுவது வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் இந்த விபத்துக்குப் பிறகு அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

அண்ணாசாலை தபால் நிலையம் எதிரில் உள்ள சுரங்கப்பாதை

*828 வினா-திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாசாலையில் தபால் நிலையத்திற்கு எதிரில் போடப்பட்ட சுரங்கப்பாதை வேலைக்கு போடப்பட்ட மதிப்பீடு: செய்யப்பட்ட செலவு முறையே எவ்வளவு?

(ஆ) இப்பாதை திறப்பு விழாப்பணி யார் தலைமையில் செய்யப்பட்டது?

(இ) இதில் அறிவிக்கப்பட்டவாறு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மேற்படி வேலையின் மதிப்பீட்டுத்தொகை ரூ. 12.60 இலட்சம். இவ்வேலைக்கு 31-1-78 வரை ரூ. 12.27 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி பணிக்கான திறப்பு விழா ஏதும் நடைபெறவில்லை.

(இ) விழா ஏதும் நடைபெறாததால் இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சுரங்கப்பாதை திறப்பு விழாவை செய்ய மாண்புமிகு அமைச்சர் திரு. பா. ராமச்சந்திரன் அவர்களை அழைத்திருந்தார்கள். அது விடுபட்டுப் போய்விட்டதா? அப்படியானால் என்ன காரணத்தால் அது விடுபட்டது? அவர்கள் சம்மதிக்கவில்லையா? இல்லாவிட்டால் அப்போதுள்ளவர்கள் அவர்களை அனுப்ப சம்மதிக்கவில்லையா? அதைப்பற்றிச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தச் சுரங்கப் பாதையைத் திறக்க மத்திய அமைச்சரை அழைத்தது பற்றிய குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: இத்தகைய சுரங்கப்பாதைகள் சென்னை நகரில் தற்போது எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன? இனிமேல் எந்தெந்த இடங்களில் அமைப்பதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னை நகரில் பதினொரு இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1. கிண்டி அருகிலுள்ள ரயில்வே மேம்பால மேம்பாட்டு வேலைகள். 2. திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் உள்ள பாலத்தை புதுப்பித்தல். 3. அண்ணா சாலையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 4. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 5 ஜி. என். டி. சாலையில் இரயில்வே அலுவலகம் அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 6. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தாஸப்பிரகாஷ் அருகே பாதசாரிகளுக்கான ஒரு சுரங்கப்பாதை அமைத்தல், 7. ஜி. என். டி. சாலையில், வால்டாக்ஸ் திரையரங்கருகே ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை அமைத்தல் 8. சாந்தி திரையரங்கருகில் ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 9. அண்ணா சாலையில் எல். ஐ. சி. நிறுவனத்திற்கருகே ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 10. ஜி. என். டி. சாலையையும் திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையையும் இணைக்க இருக்கும் இணைப்பு சாலைக்காக நிலம் கையகப்படுத்துதல். 11. ஜி. எஸ். டி. சாலையையும், வேளச்சேரி சாலையையும் தேசிய நெடுஞ்சாலையுடன் கிழக்கில் இணைக்கும் ஒரு தனிப்பாதை அமைக்க நிலம் கையகப்படுத்துதல்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

[*829 வினா— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம் சாலையை இணைக்கும் வகையில் கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.